1992 செப்டம்பர் 21]

முற்பகல் 10-55

திரு. தி. சூரத்தையா : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, டிமாண்ட் நோட்டிபிகேஷன் செயல்படுத்தப்படும் என்று மாண்புமிகு அமைச்சர் அவர்கள் தெரிவித்தார்கள். எ போது செயல்படுத்தப்படும் என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. டி. எம். செல்வகணபதி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் தெளிவாகக் குறிப்பிட்டு இருக்கின்றேன். கோரிக்கை மனுவினுடைய எண்ணிக்கை இன்னும் கிடைக்கப்பெறவில்லை. வீட்டுவசதி வாரியத்திற்கு கோரிக்கை மனு கிடைக்கப் பெற்றுக் கொண்டிருக்கிறது. அதற்கு ஒரு காலவரையறை நிர்ணயிக்கப்பட்டிருக்கிறது. மனுக்கள் கிடைக்கப்பெற்ற பிறகு, நிலம் கையகப்படுத்தப்பட்ட பிறகு தான் இந்தத் திட்டத்தைச் செயல்படுத்த முடியும். இதற்குண்டான செயல்பாடுகள் குறித்து அரசு துரிதமாக நடவடிக்கை எடுக்கும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : வினா எண் 15, திரு. சி. சுவாமிநாதன், மாண்புமிகு சமூகநலத்துறை அமைச்சர்.

15—

கந்தர்வ கோட்டையில் கல்யாண மண்டபம்

*9814—திரு. சி. சுவாமிநாதன் :

மாண்புமிகு சமூகநலத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா

கந்தர்வகோட்டையில் சமூகநலத்துறையின் சார்பில் கல்யாண மண்டபம் கட்டும் செயற் குறிப்பு அரசிடம் உள்ளதா ?

மாண்புமிகு திருமதி. இரா. இந்திரகுமாரி (சமூக நலத்துறை அமைச்சர்) : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

அப்படிப்பட்ட செயற்குறிப்பு எதுவும் அரசிடம் இல்லை.

திரு. சி. சுவாமிநாதன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழகத்தில் இப்போது எல்லா இடங்களிலும் திருமணக் கூடங்கள் கட்டப்படுகின்றன. கந்தர்வகோட்டைப் பகுதியைப் பொறுத்த வரையில், இந்தக் கோரிக்கையை மிக நீண்ட நாட்களாக அந்த மக்கள் கேட்டுக் கொண்டு இருக்கிறார்கள். அப்படியென்றால், எந்த் அடிப்படையில் திருமணக்கூடங்கள் தமிழகத்தில் இப்போது ஆரம்பித்து கட்டப்படுகின்றன என்பதனை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திருமதி இரா. இந்திரகுமாரி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சமூகநலத் துறையின் மூலம் எந்த திருமணக் கூடங்களும், எங்கேயும் கட்டப்படுவதில்லை. திருமண உதவித் திட்டங்களை மட்டும் இத்துறை செயல்படுத்துகிறது.

1992 செப்டம்பர் 21]

திரு. சி. சுவாமிநாதன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இப்போது கந்தர்வகோட்டைப் பகுதியைப் பொறுத்த வரையில் 80 ஆயிரம் மக்கள் தொகையைக் கொண்டது. தஞ்சாவூருக்கும் புதுக்கோட்டைக்கும் இடையிலே இருக்கிற அந்தப் பகுதி மக்கள், திருமணம் செய்ய வேண்டுமென்று சொன்னால், அவர்கள் தஞ்சாவூருக்குச் செல்ல வேண்டியிருக்கிறது; அல்லது புதுக்கோட்டைக்குச் செல்ல வேண்டி இருக்கிறது. திருமண மண்டபங்கள் கட்டுகிற திட்டம் சமூக நலத் துறையின் மூலம் இல்லையென்று சொன்னாலும், சமூக நலக் கூடமாவது கந்தர்வகோட்டையில் அமைத்து, திருமணங்களை நடத்துவதற்கு அந்தப் பகுதி மக்களுக்கு ஒரு வாய்ப்பு அளிக்க முடியுமா என்பதனை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : மாண்புமிகு முதல்வர் அவர்கள்.

மாண்புமிகு டாக்டர் ஜெ. ஜெயலலிதா : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்து சமய அறநிலையத்துறையின் கீழ் இத்தகைய திருமண மண்டபங்கள் ஆங்காங்கே கட்டப்படுகின்றன. எனவே, அப்பகுதி மக்கள் இத்தகைய ஒரு திருமண மண்டபம் தேவை என்று சொல்லி, விண்ணப்பித்து, அதற்காக ஓரளவு நிதியை வசூலித்தால், மீதியை இந்து சமய அறநிலையத் துறை செலவழித்து திருமண மண்டபத்தைக் கட்டிக் கொடுக்க ஆவன செய்யும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி).

மாண்புமிகு பேரவைத் தலைவர் : வினா எண் 16, டாக்டர் எஸ். சுந்தரராஜ், மாண்புமிகு ஆதி திராவிடர் நலத் துறை அமைச்சர்.

16—

இராமநாதபுரம் மாவட்டத்தில் கால்நடை நோய் புலனாய்வு பிரிவு.

*9116—டாக்டர் எஸ். சுந்தரராஜ் :

மாண்புமிகு ஆதிதிராவிடர் நலத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா :

இராமநாதபுரம் மாவட்டத்தில் கால்நடை நோய் புலனாய்வுப் பிரிவு ஆரம்பிக்கப்படுமா ?

மாண்புமிகு திரு. எம். ஆனந்தன்; ஆதிதிராவிடர் நலத்துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,